## In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 90/2021 தேதி- 10.02.2026

(P.W.1) . அசோக் டார்வின்

**1 மற்றும் 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் பிளம்பராக வேலை செய்து வருகிறேன். பிளம்பர்வேலை தனியாக வேலை செய்து வருகிறேன். நான் அரசியல் கட்சியில் உறுப்பினராக இருக்கிறேன். 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் சென்னையில் வசித்து வந்தார்கள் என்றால் எப்போதாவது ஊருக்கு வந்து செல்வார்கள். வழக்கு எ பட்டிகை சொத்திற்கு எப்போது காம்போண்ட் சுவர் கட்டினேன் என்றால் 2006 மற்றும் 2010 ஆம் ஆண்டு கட்டினேன். 2006 ஆம் ஆண்டு வடக்கு பக்கம் பகுதியாக கட்டினேன். 2010 ஆம்ஆண்டு மேற்கு பக்கமும் வடக்கு பக்கம் பகுதியாக கட்டினேன். மீதமிருக்கும் காம்போண்ட் சுவர் நான் கட்டவில்லை. வேறு இடத்தவர்கள் கட்டினார்கள். எ பட்டிகை சொத்தை சுற்றியிருக்கும் நான்கு பக்க காம்போண்ட் சுவர் இரண்டு பக்கம் என்னுடையதல்ல என்றால் சரிதான்.

வழக்கு பி பட்டிகை சொத்தை தொட்டு இரண்டு வீடுகள் இருந்தது என்றால் சரிதான். ஒன்று சீமோன் மற்றொன்று பிரான்சிஸ் மகன் ஜாண்பீட்டருடையது. மொத்தம் 12 சென்டில் கிழக்கு பக்க 6 சென்ட் சீமோனுடையது. மீதம் 6 சென்ட் ஜாண்பீட்டருடையது. கிழக்கு பக்கம் சீமோனுடையது அதற்கு பின்பக்கம் ஜாண்பீட்டருடையது. சீமோனின் வீட்டில் 1 ஆம் வாதி எவ்வளவு நாள் வேலை செய்து வந்தார் என்றால் 30 வருடமாக தொடர்ந்து பால் வியாபாரம் செய்து வந்தார். சீமோனுக்கு குழந்தைகள் கிடையாது. கடைசி காலத்தில் சீமோனை கவனித்துக்கொண்டது 1 ஆம் வாதிதான். 1 ஆம் பிரதிவாதியும் 2 ஆம் பிரதிவாதியும் சென்னையில் இருந்ததால் என்னுடைய அம்மாவான 1 ஆம் வாதிதான் சீமோனை கவனித்து வந்தார்.

1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் பணம் எதுவும் அனுப்புவதில்லை. 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள்தான் அடிக்கடி வந்து சீமோனை கவனித்துக்கொள்ள பணம் கொடுத்து செல்வார்கள் என்றால் சரியல்ல. 2 ஆம் பிரதிவாதிக்கு சீமோன் உயில் எழுதிக்கொடுக்கும்போது 1 ஆம்வாதி சீமோனுடன்தான் இருந்தார் என்றால் சரியல்ல. வழக்கு பி பட்டிகை வடக்கு பக்கம் மதில் சுவர் கட்டியது எந்த ஆண்டு

என்றால் 2020 ஆம் ஆண்டு. வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கிறேன். 2014 ஆம் ஆண்டே வடக்கு பக்க உரிமையாளர்கள் வடக்கு பக்கம் காம்போண்ட் சுவர் கட்டிவிட்டார்கள் என்றால் சரியல்ல. சீமோன் இறுதிகாலம்வரை அவருக்குரிமைப்பட்ட 6 சென்ட் இடத்தை தனியாக அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தந்தை பிரான்சிஸ்சும் தனியாக அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. பிரான்சிஸ்சின் பங்கையும் சீமோன்தான் கவனித்து வந்தார். பிரான்சிஸ் தனியாக அனுபவித்து வந்த பகுதியில் ஒரு வீடு கட்டி இருந்தார் என்றால் பஞ்சாயத்தில் அனுமதி பெற்று வீடு கட்டவில்லை. சிறிய 10 க்கு 12 அளவில் காங்கிரீட் ரூம் போடப்பட்டிருந்தது.

பிரான்சிஸ் 2001 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். பிரான்சிஸ் இறக்கும்வரை மேற்படி வீட்டில்தான் இருந்தார் என்றால் சீமோனின் வீட்டில்தான் இருந்தார். பிரான்சிஸ் இறக்கும்வரை சீமோன்தான் அவரை கவனித்தார் என்றால் எனது அம்மாதான் சீமோனையும் பிரான்சிஸ்சையும் கவனித்து வந்தார். வா.சா.ஆ. 2 உயில் ஆவணத்தில் சீமோனுக்கு கிழக்கு பக்கம் 6 சென்ட், பிரான்சிஸ்க்கு மேற்கு பக்கம் 6 சென்ட் பூர்வீக சொத்தில் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கம் 4 லிங்ஸ் பாதை தேவசகாயம் மகன் தோமாஸ் வீட்டிற்கு செல்லும் பாதை அதை அடைக்க எந்த உரிமையும் இல்லை என கூறப்பட்டுள்ளது.

சீமோன் 2 ஆம் பிரதிவாதிக்கு 6 சென்ட் சொத்தை கொடுத்துள்ளாரா என்றால் வழிப்பாதை போக மீத சொத்தை கொடுத்துள்ளார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 6 சென்ட் சொத்து என கூறியிருப்பது தவறா என்றால் தவறில்லை. சீமோனுக்கு உள்ள 6 சென்ட் சொத்தையும் அவரது தம்பி மகனுக்கு உயில் ஆவணப்படி கொடுத்துவிட்டார் என்றால் வழிப்பாதைபோக 6 சென்ட் இடத்தை உயில் எழுதிக்கொடுத்துள்ளார். சீமோன் 2 ஆம் பிரதிவாதிக்கு கொடுத்த சொத்தின் 4 பக்க எல்கை வடக்கு 4 லிங்ஸ் வழிப்பாதை, கிழக்கு ரோடு, தெற்கு அருள்தாஸ்வகை, மேற்கு ஜாண்பீட்டர் வீடும் மனையும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் வடக்கு பக்கம் 4 லிங்ஸ் வழிப்பாதையை விட்டு மேற்கு பக்க எல்கை காட்டப்பட்டுள்ளது.

ஜாண்பீட்டர் வீட்டிற்கு செல்லத்தான் சீமோன் மேற்படி 4 லிங்ஸ் வழிப்பாதையை போட்டார் என்றால் சரியல்ல. ஆகையால்தான் உயில் ஆவணத்தில் மேற்கு பக்கம் ஜாண்பீட்டர் வீடும் மனையும் என கூறியுள்ளார் என்றால் சரியல்ல. சீமோன் வழி கொடுக்க வேண்டுமென்றால் அவரது சொத்தில்தான்

கொடுக்கவேண்டும். சீமோனின் தம்பி பிரான்சிஸ்சின் இடத்தில் வழிப்பாதை அவகாசம் கொடுக்க முடியாது என்றால் வாக்கால் பாகம் வைத்து சகோதரர்கள் அனுபவித்து வந்ததால் வழிப்பாதை அவகாசம் கொடுத்தார்.

கருங்கல் சார்பதிவாளர் அலுவலகத்தில் உயிலை பதிவு செய்யாமல் திட்டமிட்டு தக்கலை சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது வீட்டின் பின்புறத்திலிருக்கும் தேவசகாயம் மகன் தோமஸ் என்பவரின் வீட்டிற்கு செல்வதற்காக தபசில் சொத்தின் வடக்கு ஓரத்தில் இருந்து ரோடுவரையிலும் செல்ல 4 லிங்ஸ் பாதை போடப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது என்றால் உயில் ஆவணம் எழுதியது பற்றிய விபரம் எனக்கு தெரியாது ஆனால் உயிலில் பாதை அவகாசம்பற்றி தெளிவாக கூறப்பட்டுள்ளது. சீமோனின் வீட்டிற்கு நேர் பின்பகுதியில் யாருடைய வீடு என்றால் ஜாண்பீட்டருடைய வீடு. உயிலை எழுதும்போது பிராண்சிஸ் வீடு என்று குறிப்பிடாமல் தோமாஸ் என்ற பெயரை குறிப்பிட்டு நாங்கள் எழுத செய்தோம் என்றால் சரியல்ல. சீமோன் அவரது உயிலில் தபசில் சொத்தின் வடக்கு ஓரத்தில் 4 லிங்ஸ் வழிப்பாதை ரோடு வரைக்கு என்றுதான் குறிப்பிட்டுள்ளார். மொத்த சொத்தில் 4 லிங்ஸ் வழிப்பாதை இல்லை என்றால் உயிலில் தெளிவாக தேவசகாயம் மகன் தோமாஸ் வீட்டிற்கு செல்ல என கூறியுள்ளார்.

உயிலில் மேற்கு பக்க எல்கையாக ஜாண்பீட்டர் வீடும் மனையும் என கூறியுள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணப்படி எந்த வழிப்பாதை உரிமையும் எங்களால் கேட்க முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 2 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள வழிப்பாதை 1ஆம் பிரதிவாதியின் தந்தை வைத்திருந்ததால் 1ஆம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. உயிலை மோசடியாக தயாரித்த விபரம் தெரிய வந்துவிடும் என்பதால் 1ஆம் வாதியை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல அவர் வயது முதிர்ந்தவர். வழக்கு எ பட்டிகையில் இருக்கும் வீடு எவ்வளவு காலமாக பூட்டியிருக்கிறது என்றால் 2 வருடமாக பூட்டியிருக்கிறது.

வழக்கு எ பட்டிகை சொத்தின் வீட்டிற்கு மின் இணைப்பு இருக்கிறதா என்றால் இருக்கிறது. மின்இணைப்பு வீட்டின் பின்பகுதியிலிருந்து வருகிறது. ஆலஞ்சு சர்ச்சிலிருந்து ஆலஞ்சு முந்திரி தொழிற்சாலை செல்லும் சாலையிலிருந்து கிழக்காக செல்லும் வழிப்பாதை வழியாக எ பட்டிகை சொத்திலிருக்கும் வீட்டிற்கு மின்இணைப்பு வருகிறது என்றால் சரிதான். மேற்படி வழிப்பாதை எ பட்டிகை

சொத்தின் தென்மேற்கு மூலையில் வந்து முடிகிறது என்றால் சரிதான். அந்த வழிப்பாதையில் நடக்க எங்களுக்கு உரிமை கிடையாது. மேற்படி வழிப்பாதையின் இருபக்கமும் 10, 15 வீடுகள் இருக்கிறது என்றால் சரியல்ல. மேற்படி வழிப்பாதையை ஒட்டி இருக்கும் வீட்டிற்கு மின்இணைப்பு அந்த வழிப்பாதை வழியாகத்தான் வருகிறது என்றால் சரிதான். அந்த வழிப்பாதை எவ்வளவு ஆண்டுகளாக உள்ளது என்றால் அது வழிப்பாதை கிடையாது வழிப்பாதைக்கு அருகில் இருப்பவர்கள் அவர்கள் உபயோகத்திற்காக விட்டுவிட்ட பகுதியாகும். மேற்படி பகுதி 50 வருடங்களுக்கு மேலாக வழிப்பாதையாக இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

வழக்கு எ பட்டிகை சொத்திற்கு நானும் என்னுடைய மூதாதையரும் மேற்படி வழிப்பாதையைத்தான் பாதையாக உபயோகித்து வருகிறோம் என்றால் சரியல்ல. எனது வீடு தற்போது கருங்கல் ஆலஞ்சு முந்திரி தொழிற்சாலை பக்கத்தில் இருக்கிறது நான் வீடு வைத்து 12 வருடம் ஆகிறது. 12 வருடமும் நான் அதிகமாக எனது அம்மாவின் வீட்டில்தான் இருப்பேன். எனது சகோதரர்கள் எனது வீட்டிற்கு அருகில்தான் வீடு வைத்துள்ளார்கள். ஆனால் குடும்ப வீட்டில்தான் வசிக்கிறோம். அனைவருடைய வீடும் இரண்டு மாடி கொண்ட வீடுதான். நான்தான் கடைசியாக வீடு வைத்தது. எனது மூத்த சகோதரர்கள் எல்லாம் வீடு வைத்து 20 வருடம் இருக்கும் என்றால் 15 வருடம் இருக்கும். நாங்கள் 5 பேரும் தனித்தனியாக வீடு வைத்து அதில் இருக்கிறோம் என்றால் குடும்ப வீட்டில்தான் இருக்கிறோம். எனது அம்மாவை அனைவரும் பராமரித்து வருகிறோம். எனது அம்மா குடும்ப வீட்டில்தான் இருப்பார்.

நான் குடும்ப வீடு என கூறுவது 400 சதுர அடி கொண்டது. நான் வீடு வைத்திருப்பது 1100 சதுர அடி கொண்டது. எங்கள் அனைவரது வீட்டிலும் ஏசி இருக்கிறதா என்றால் இல்லை. 1100 சதுரஅடி கொண்ட வீட்டை விட்டுவிட்டு நாங்கள் அனைவரும் 400 சதுர அடி கொண்ட வீட்டில் வசித்து வருகிறோம் என்பது நம்பக்கூடியதாக இல்லை என்றால் நம்பக்கூடியதுதான். வழக்கு எ பட்டிகை சொத்திலிருப்பது வீடே கிடையாது தேங்காய்களை எடுத்து வைக்கும் ஒரு சிறிய செட் என்றால் சரியல்ல. 40 வருடங்களாக வழக்கு எ பட்டிகை சொத்திலிருக்கும் வீட்டில் யாரும் வசிக்கவில்லை என்றால் 2023 ஆம் ஆண்டுவரை அனைவரும் அங்குதான் வசித்து வந்தோம்.

வழக்கு பி பட்டிகை சொத்து வழக்கிற்காக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நானோ எனது மூதாதையரோ பி பட்டிகை சொத்தை வழிப்பாதையாக ஒரு

போதும் உபயோகித்தது கிடையாது என்றால் சீமோன் 4 லிங்ஸ் வழிப்பாதை விட்டுதான் வீடு வைத்துள்ளார். வழக்கு எ பட்டிகை சொத்தை தொட்டு தென்மேற்கு பகுதியில் எனது அப்பா 2 சென்ட் இடத்தை வாங்கினாரா என்றால் சரிதான். மேற்படி சொத்து முந்திரி தொழிற்சாலைக்கு செல்லும் சாலையை தொட்டு கிழக்காக செல்லும் வழிப்பாதையை தொட்டு உள்ளது என்றால் சரியல்ல. வழிப்பாதைக்கும் எ பட்டிகை சொத்திற்கும் இடையில்தான் எனது அப்பா வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. 2010 ஆம் ஆண்டு உள்ள ஆவணத்தில் எனது அப்பா அதை தெளிவாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

உண்மையில் எனது அப்பா வேறு வழிப்பாதையை உபயோகித்திருந்தால் மேற்படி வழிப்பாதையை 2010 ஆம் ஆண்டு வாங்கியிருக்க மாட்டார் என்றால் கடனாக கொடுத்த பணத்திற்காகத்தான் மேற்படி 2 சென்ட் இடத்தை வாங்கினார்.

(பிரதி வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )